## VBS ஆசிரியர்கள் கவனத்திற்கு

✸ குழந்தைகளின் வயது, மனநிலைக்கு ஏற்ப

1. முதல் குழு - ஆர்வ நிலை (பாலர் வகுப்பு, 1, 2 வகுப்புகள்)
2. இரண்டாம் குழு - தொடக்க நிலை (3, 4, 5 வகுப்புகள்)
3. மூன்றாம் குழு - இளநிலை (6, 7, 8 வகுப்புகள்)
4. நான்காம் குழு - முதுநிலை (9, 10, 11 வகுப்புகள்)

என்று தனித்தனியாக ஆசிரியர் கையேடுகள், மாணவர் பயிற்சி ஏடுகள் உண்டு. மேலும், வருகைப் பதிவு படம், பாடல் ஏடு, பேட்ஜ், தொடர் கதை நூல், ஒலிக்குறுந்தகடு (CD), திரைப்பட DVD ஆகிய துணைக்கருவிகளும் உள்ளன.

✸ பரிந்துரைக்கப்படும் மாதிரிக் கால அட்டவணை

| | | |
|---|---|---|
| 09-00 | - | ஆசிரியர்கள் கூடிச் செபித்தல் |
| 09-15 | - | பொதுவான பாடல் பயிற்சி |
| 09-45 | - | மாணவர்கள் கூடிச் செபித்தல் |
| 10-00 | - | குழுப் பாடவேளை - I - (*அந்த நாளுக்குரிய இறைவார்த்தைப் பாடத்தைத் தகுந்த தயாரிப்புடன் துணைக்கருவிகளுடன் குழுக்களில் ஆசிரியர் நடத்துகிறார்*) |
| 10-45 | - | இடைவேளை - சிற்றுண்டி வழங்குதல் |
| 11-00 | - | குழுப் பாடவேளை - II - (*குழுக்களில் விடை எழுதுதல், மனப்பாடம் ஒப்புவித்தல், வருகைப் பதிவு படம் ஒட்டுதல், வர்ணம் தீட்டுதல்*) |
| 11-45 | - | பொதுவான விளையாட்டு |
| 12-00 | - | பொதுவான பாடல் பயிற்சி |
| 12-15 | - | பொதுவான தொடர்கதை |
| 12-30 | - | நிறைவு செபம், திறனாய்வு, திட்டமிடல். |

✸ **ஆசிரியர்களும் மாணவர்களும் தினமும் திருவிவிலியம் கொணர்தல் வேண்டும்.**

© *தயாரிப்பு:* **செயலர், தமிழக விவிலியப் பணிக்குழு, திண்டிவனம் 604 001**
*வெளியீடு:* **இயக்குநர், தமிழக முப்பணி நடுநிலையம், திண்டிவனம் - 604 001**

விடுமுறை

முதலாம் ஆண்டு (A)

# விவிலியக் கல்வி

# VBS

# ஆசிரியர் கையேடு

முதல் குழு - ஆர்வ நிலை (பாலர் வகுப்பு 1 , 2 வகுப்புகள்)

## மாபெரும் தலைவர்கள்



முதலாம் ஆண்டு (A)

# VBS ஆசிரியர் கையேடு

## முதல்குழு - ஆர்வ நிலை

### பாலர் வகுப்பு, 1, 2 வகுப்புகள்

# மாபெரும் தலைவர்கள்

முதல் நாள்

## 1. ஆதாம்-ஏவா

**பாகம் - 1 பாடப் போதனா முறை**

### இறைவார்த்தை

தொடக்க நூல் 2:8, 18-24

*(இந்த இறைவார்த்தைப் பகுதியை முன்னதாகவே வாசித்துத் தயார் செய்திடுக).*

### இறைச்செய்தி

- இறைவன் தனிப்பட்ட கரிசனையோடு மனிதனைப் படைத்தார்.
- மனிதர் படைப்புகளின் மையம்.
- ஆதாம், ஏவா நம் முதல் பெற்றோர்.

### மனநிலை

மனிதராகிய நான் கடவுளின் படைப்பில் உயர்ந்த படைப்பு. ஆகவே என்னைப் படைத்த கடவுளை வணங்குவேன்.

**1. தொடக்கச் செபம்**

அன்பான ஆண்டவரே! எங்களைப் படைத்துப் பராமரித்து வருபவர் நீர். அதற்காக உம்மைப் போற்றுகிறோம். உம் திருவுளப்படி வாழ வரம் தாரும். ஆமென்.

**2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்**

வனிதாவின் அப்பா வெளிநாட்டில் வேலை செய்தார். அவர் ஊருக்கு வந்த பொழுது ஓர் அழகான பொம்மை வாங்கி வந்தார். அந்தப் பொம்மையை வனிதாவுக்கு அன்புப் பரிசாகக் கொடுத்தார். அந்தப் பொம்மையைப் பார்த்த வனிதா மிக்க மகிழ்ச்சி அடைந்தாள். அந்தப் பொம்மை அழகாகச் சிரித்தது, ஆடியது. படுக்க வைத்துப் பார்த்தால் கண்களை மூடித் தூங்கியது. ஆனால் சாப்பிடவே இல்லை. இது வனிதாவுக்கு வியப்பாக இருந்தது.



**3. அடையாளத்தை அலசுதல்**

- பொம்மை என்னென்ன செய்தது?
- வனிதா ஏன் வியப்படைந்தாள்?
- நீங்கள் எதையெல்லாம் பார்த்து வியப்படைவீர்கள்?

**4. வாழ்க்கை மதிப்பீடு**

உலகத்தில் பல பொருள்கள் நமக்கு வியப்பாகத்தான் இருக்கின்றன. அவற்றைப் புரிந்து, ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்**

இந்த உலகில் உள்ள நம்மையும், அனைத்து உயிர்களையும் படைத்தவர் ஆண்டவராகிய கடவுள் என்பதை இன்று அறிந்து கொள்வோம்.

**6. இறைவார்த்தைக்கு அஞ்சலி**

ஆசிரியர் மறைநூலை உயர்த்திப் பிடித்துவர, அவருக்கு முன்பாக மாணவ மாணவியர் இருபுறமும் வரிசையாக “தெய்வ மக்கள் பாடுவோம்” என்ற பாடலைப் பாடிக்கொண்டும் கைகளைத் தட்டிக் கொண்டும் பவனியாக வருவர். அலங்கரிக்கப்பட்ட மேடையில் விவிலியம் அரியணை ஏற்றப்படும். தீப, தூப மலர் அஞ்சலி நடைபெறும்.

**7. இறைவார்த்தை முழக்கம்**

தொடக்க நூல் 2:8, 18-24

**8. இறைவார்த்தை விளக்கம்**

- பஞ்சிலிருந்து நூல், நூலிருந்து துணிகள், துணிகளிலிருந்து விதவிதமான ஆடைகள் உருவாக்கப்படுகின்றன. அதுபோல பெரிய மரங்களை அறுத்து நாற்காலிகள், பெஞ்சுகள், மேசைகள், கட்டில்கள் என பலவகைப் பொருள்கள் உருவாக்கப் படுகின்றன.
- கடவுள் தமது சொந்த வல்லமையால் இந்த உலகத்தையும் அதில் உள்ள உயிரினங்கள் அனைத்தையும் படைத்தார்.
- கடவுள் மண்ணால் மனிதனை உருவாக்கி அதன் மேல் உயிர் மூச்சை ஊதி, அவனைப் படைத்தார்.
- மனிதர் கடவுளின் மிக உயர்ந்த படைப்பு.